DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.158/2017**

| Deposition of the | : | PW12 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜதுரை | Age | : | 50 |
| F/N | | சண்முக அய்யா | Occupation | : | காவல் ஆய்வாளர், மதுரை |
| Village | : | | | | |
| District | : | மதுரை | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 27-th day of March 2023.

**27.03.2023**
**முதல் விசாரணை**

நான் மதுரை நகர் S.S காலனி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.07.2016 ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது காவல் ஆய்வாளர் திரு.கணபதி அவர்கள் முதல் விசாரணை செய்து வைத்திருந்த குற்ற எண். 10/2013 க்கு உட்பட்ட வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டேன். 1 முதல் 12 வரையிலான சாட்சிகளை நான் விசாரணை செய்ததில் அவர்கள் ஏற்கனவே சொன்னதுபோல் என்னிடமும் சொன்னதால் நான் மீண்டும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் அ.சா.1 அவர்களை கடந்த 04.04.2017 ம் தேதி ஒட்டன்சத்திரம் நீதிமன்ற அலுவலகத்தில் வைத்து விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு விசாரணையை முடித்து ஆவணங்களுடன் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். 9 முதல் 13 வரையிலான ஆவணங்களின் அசல் நீதிமன்ற பாதுகாப்பில் இருந்ததால் அவைகளின் அசல் ஆவணங்களை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

**1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சம்மந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்திற்கு வந்து பெற்றேனா என்றால் இல்லை. அ.சா.1 ஆவணங்கள் நீதிமன்ற பாதுகாப்பில் உள்ளதால் அந்த ஆவணங்களை வழக்கு விசாரணையின்போது தாக்கல் செய்துவிடலாம் என்று கூறினார்கள். இவ்வழக்கின் 1 முதல் 13 வரையிலான ஆவணங்களை யார் கைப்பற்றினார்கள் என்றால் அ.சா.11 கைப்பற்றினார். அவர் யாரிடம் இருந்து கைப்பற்றினார் என்று எனக்கு தெரியாது. 1 முதல் 13 வரையிலான ஆவணங்கள் நகல் ஆவணங்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் ஆவணங்களின் உண்மை தன்மையை அறிய நான் ஏதேனும் சாட்சியை விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை.

2. நினைவூட்டல் கடிதம் மட்டும் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பினேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 332 போலி உத்தரவுகளை நான் பார்த்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட போலி முத்திரைகளை கைப்பற்றினேனா என்றால் இல்லை. கையெழுத்து போலியானவை என்று அறிய நான் சாட்சிகளிடம் மாதிரி கையொப்பம் பெற்று அதை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. நீதித்துறை நடுவர் எண்.1, இராமநாதபுரம் நீதிமன்றத்தில் போலியாக தயார் செய்த 10 உத்தரவுகளை நான் ஆய்வு செய்து குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த 10 உத்தரவுகளை குறித்து நான் விசாரணை ஏதும் செய்தேனா என்றால் செய்யவில்லை. அ.சா.11 அந்த 10 உத்தரவுகளை குறித்து விசாரணை செய்திருந்தாரா என்றால் செய்திருந்தார்.

3. அ.சா.11 அந்த 10 உத்தரவுகளும் போலியானவைகள் என்றும், அதை தயாரித்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அறிக்கை தயார் செய்து வைத்திருந்தார். அந்த அறிக்கையை மீறி நான் அந்த 10 உத்தரவுகளை தயார் செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை என்பது ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் போலீசார் கொடுக்கும் ஒரு இறுதி அறிக்கை என்றால் சரிதான். அந்த 10 உத்தரவுகளை தயார் செய்த நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தின் ஊழியர்களை இவ்வழக்கின் எதிரியாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. இந்த வழக்கில் எனக்கு எந்த விஷயமும் தெரியாத நிலையில் கணபதி ஆய்வாளர் தவறாக புலன் விசாரணை செய்து வைத்திருந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் அசல் ஆவணங்களை பரிசோதனை செய்யாமல் ஒரு தலை பட்சமாக எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**